**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 24–ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **கனிமொழி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**24.11.2025** **OS.47/2023** **வா.சா.1 கனிமொழி**

**<u>3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:

1) நான் என்ன பரிகாரம் கோரி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வெற்றி பாண்டியனுக்கு எனது மகன் வீரமாகாளியை வாரிசு என அறிவிக்கக் கோரி தாவாவை தாக்கல் செய்துள்ளேன். வெற்றிபாண்டியன் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது கணவர் ஆவார். வெற்றிபாண்டியனுக்கும் எனக்கும் எந்த தேதியில் எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் கடந்த 14.07.2013 ம் தேதியில் திருவேடகம் சிவன் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது.

2) எனக்கும் வெற்றிபாண்டியனுக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு ஆதாரமாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் திருமணம் நடைபெற்றதற்கு கோயிலில் வழங்கிய ரசீதை தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எவ்வித ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வெற்றிபாண்டியனுக்கும் 5ம் பிரதிவாதி சரண்யா என்பவருக்கும் சட்டப்படியாக திருமணம் நடைபெற்று அவர்களுக்கு 6, 7 மைனர் பிரதிவாதிகள் சட்டப்படியான வாரிசுகளாக உள்ளார்கள் என்றால் சரிதான்.

3) எனக்கும் வெற்றிபாண்டியனுக்கும் திருமணம் நடைபெற்ற சமயத்தில் வெற்றி பாண்டியனுக்கும் 5ம் பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமணமானது ஊர்ஜிதத்தில் தான் இருந்தது என்றால் சரிதான். ஏற்கனவே திருமணம் ஆன நபரை அவருக்கு சட்டப்படி விவாகரத்து ஆகாத நிலையில் அவரை 2வதாக நான் திருமணம் செய்தது சட்டப்படி தவறு என்றால் சரிதான். நான் எத்தனை

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2025.11.24 14:29:10 +0530

பேரை பிரதிவாதியாக காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 5 நபர்களை பிரதிவாதிகளாக காட்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் அவர்கள் முறையே ராஜாமணி, கல்பனாதேவி, சரண்யா, மைனர் தனுஸ்ரீ, மைனர் சமுத்ரா தேவி ஆகியோர்கள் என்றால் சரிதான்.

4) வேறு நபர்கள் மீது நான் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 வம்சாவழிப் பட்டியல் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 வழக்கறிஞர் சட்டஅறிவிப்பானது மைனர் வீரமாகாளிக்காக நான் அனுப்பியது என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் சட்டஅறிவிப்பானது இந்த நம்பர் 3, 4 பிரதிவாதிகளுக்கும் வீரமுருகன், தனலெட்சுமி என்ற இவ்வழக்கில் தரப்பினராக சேராத நபர்களுக்கும் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

5) வா.சா.ஆ.3 சட்டஅறிவிப்பானது எதற்காக அனுப்பினேன் என்றால் எனது மகனுக்கு வாரிசு சான்றிதழ் வாங்குவதற்கு முன்பாக சட்டஅறிவிப்பில் கண்ட தரப்பினர்கள் வேறு எவ்வித ஏற்பாடும் செய்துவிடக்கூடாது என்பதற்காக அனுப்பப்பட்டதாகும். நான் வேறு எந்த காரணத்திற்காகவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். நான் வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும் நான் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2025.11.24 14:29:42 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam